# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

---

*[1986, ஜூன் மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1986, ஜூன் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

**விலை : ரூபா 1.20** — **தபாற் செலவு : சதம் 75**

# 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கக் காணிச் சீர்திருத்தம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம்

1986 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆந் தேதியன்று அத்தாட்சிப் படுத்தப்பட்டது.

ச. வ.—ஓ. 11/83

**தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டத்தையும், 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தையும் திருத்துவதற்கும், குறித்த சில கட்டளைகள் தொடர்பாகவும் தீர்மானங்கள் தொடர்பாகவும் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1986 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

### தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டத்துக்கான திருத்தம்.

2. (இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தின் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினை நீக்கஞ்செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :— தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(2) இவ்வுட்பிரிவு சட்டமாக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் திருமணம் காரணமாக அல்லது மரபுரிமை காரணமாக அல்லது இவையிரண்டும் காரணமாக, உச்ச வரம்பை விஞ்சி கமத்தொழிற் காணிக்கு ஆள் எவரும் சொந்தக்காரராக வருமிடத்து, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் ஆகாது. அத்துடன் அத்தகைய ஆள், அத்தகைய மேன்மிகையை, அத்தகைய கமத்தொழிற் காணியின் சொந்தக்காரராக வரும் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக் காலப்பகுதிக்குள்ளாக விற்பனை மூலமாக அல்லது வேறு வகையாக, கைமாற்றலாம். அத்தகைய ஆள் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய மேன்மிகையைக் கைமாற்றம் செய்யத் தவறுமிடத்து, அத்தகைய காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், அத்தகைய மேன்மிகை—

(அ) ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அந்த ஆளினால் ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்ட சட்டத்தாலான குத்தகையொன்றின்கீழ் வைத்திருக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.',.

1—எ 039738—3,025 (04/86)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவானது, அப்பிரிவிலிருந்து (ஆ) என்னும் பந்தியை விட்டுவிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) (i) நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அல்லது அவரது பணிப்பின் கீழ் தயாரிக்கப்பட்டதும், அல்லது

(ii) நில அளவையாளர் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரிமம் பெற்றுள்ள நில அளவையாளர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டதும், நில அளவைக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கின்ற நில அளவைத் திணைக்களத்தின் அலுவலர் ஒருவரால் அங்கீகரிக்கப்பட்டதும்,

குத்தகைக்காரரால் (அ) என்னும் பந்தியின்கீழ் வைத்திருக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட கமத்தொழிற் காணி பற்றியதுமான நிலஅளவை வரைபடமொன்று பற்றிக் குறிப்பீடு செய்தல் வேண்டும்; அத்துடன்,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆஆ) என்னும் பந்தியில், "விற்பனையென்ற வகையில்" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக "விற்பனை அல்லது குத்தகை என்ற வகையில்" என்னுஞ் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"கமத்தொழிற் காணிகள் இலங்கைப் பிரசைகள் அல்லாத ஆட்களுக்கு ஆணைக்குழுவினால் பராதீனப் படுத்தப்படலாகாது.

23. இந்தத் தேசிய அரசுப் பேரவைச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்படும் ஏதேனும் கமத்தொழிற் காணி, இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவருக்கு ஆணைக்குழுவினால் பராதீனப்படுத்தப்படலாகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ii) (அ) தேயிலை, இறப்பர் அல்லது தெங்குநடுகை செய்யப்பட்ட கமத்தொழிற் காணியின் விடயத்தில், அத்தகைய கமத்தொழிற் காணி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்கு நேர் முந்திய மூன்று கணக்கீட்டாண்டுகளுக்

தும் அத்தகைய கமத்தொழிற் காணியின் உற்பத்தி ஏக்கரிலிருந்து ஏக்கரொன்றுக்கான சராசரி ஆண்டு விளைச்சலின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட பணத்தொகையொன்று; ஆயின் எவ்வாறுயினும், அத்தகைய கமத்தொழிற் காணியின் ஏக்கர் ஒன்றுக்கான சராசரி ஆண்டு விளைச்சல், இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்ட தொகை ஒன்றுக்குச் சமமாக இருக்குமிடத்து, அத்தகைய கமத்தொழிற் காணியின் உற்பத்தியிலிருக்கும் ஒவ்வோர் ஏக்கர் தொடர்பிலும் செலுத்தப்படற்பாலதான பணத்தொகையானது இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகைக்குச் சமமானதாக இருத்தல் வேண்டும்:—

| நிரை I<br>ஏக்கரொன்றுக்கான சராசரி ஆண்டு விளைச்சல் | நிரை II<br>ஏக்கரொன்றுக்கான நட்டஈட்டுத் தொகை |
|---|---|
| **தேயிலை** | ரூபா |
| 1,500 இறாத்தலுக்கு மேல் | 2,500 |
| 1,000 இறாத்தலுக்கு மேல், ஆனால் 1,500 இறாத்தலை விஞ்சாமல் | 2,000 |
| 750 இறாத்தலுக்கு மேல், ஆனால் 1,000 இறாத்தலை விஞ்சாமல் | 1,500 |
| 750 இறாத்தலும் அதற்குக் குறைவாகவும் | 1,000 |
| **இறப்பர்** | |
| 1,000 இறாத்தலுக்கு மேல் | 2,500 |
| 750 இறாத்தலுக்கு மேல், ஆனால் 1,000 இறாத்தலை விஞ்சாமல் | 2,000 |
| 500 இறாத்தலுக்கு மேல், ஆனால் 750 இறாத்தலை விஞ்சாமல் | 1,500 |
| 500 இறாத்தலும் அதற்குக் குறைவாகவும் | 1,000 |
| **தெங்கு** | |
| 3,000 காய்களுக்கு மேல் | 2,500 |
| 2,000 காய்களுக்கு மேல், ஆனால் 3,000 காய்களை விஞ்சாமல் | 2,000 |
| 2,000 காய்களும் அதற்குக் குறைவாகவும் | 1,500 ; அல்லது |

(ஆ) கொக்கோ, கறுவா, மிளகு, நெல் அல்லது வேறேதேனும் கமத்தொழிற் பயிர் நடுகை செய்யப்பட்ட கமத்தொழிற் காணியின் விடயத்தில், அத்தகைய கமத்தொழிற் காணியின் உற்பத்தியிலிருக்கும் ஒவ்வோர் ஏக்கருக்கும் 2,000 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை ;

(இ) அத்தகைய கமத்தொழிற் காணி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதியன்று நடுகை செய்வதற்கென அல்லது மீள்நடுகை செய்வதற்கெனத் தயாரிக்கப்பட்டிருந்ததும் ஆனால் அத்தேதியன்று கமத்தொழிற் பயிர் எதுவும் நடுகை அல்லது மீள்நடுகை செய்யப்பட்டிராததுமான கமத்தொழிற் காணியின் விடயத்தில், அத்தகைய கமத்தொழிற் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் 1,000 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை ;

(ஈ) அத்தகைய கமத்தொழிற் காணி ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதியன்று இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் கமத்தொழிற் பயிர் நடுகை அல்லது மீள் நடுகை செய்யப்பட்டிருந்ததும், ஆனால் அத்தேதியன்று உற்பத்தியில் இல்லாதிருந்ததுமான கமத்தொழிற் காணியின் விடயத்தில், அத்தகைய கமத்தொழிற் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் இதற்கான II ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவிற் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை—

| நிரை I<br>கமத்தொழிற் பயிர் | நிரை II<br>ஓர் ஏக்கருக்கான வீதம்<br>ரூபா |
|---|---|
| நெல் | 1,000 |
| தேயிலை | 1,000 |
| இறப்பர் | 1,000 |
| தெங்கு | 1,500 |
| கொக்கோ, கறுவா, மிளகு, நெல் அல்லது வேறு ஏதேனும் கமத்தொழிற் பயிர் | 2,000 |

(உ) பயிரிடப்படாத கமத்தொழிற் காணியின் விடயத்தில், அத்தகைய கமத்தொழிற் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் 75 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை ;" அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், முறையே அப்பந்தியின் I ஆம், II ஆம் நிரைகளின்கீழ் தோன்றும் "நெல்" அத்துடன் "ரூபா 2,500" என்ற சொல்லமைப்புக்களை விட்டுவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவானது, அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(3) ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட நாளுக்கு நேர்முந்திய நாளன்று ஆகக்குறைந்தது பதினைந்தாண்டுகளையாவது கொண்ட முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதியொன்றுடனை குத்தகையொன்றுக்கமைந்ததான கமத்தொழிற் காணியாகவுள்ளதும் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டதுமான ஏதேனும் கமத்தொழிற் காணி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு, இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எவ்விதமிருப்பினும், நாற்பது நூற்று வீதத்துக்கு அறுபது நூற்று வீதம் என்ற விகிதத்தின்படி அத்தகைய குத்தகையின் கீழுள்ள குத்தகைக்காரருக்கும் குத்தகை பெறுநருக்குமிடையே பங்கிடப்படல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய கமத்தொழிற் காணியின் குத்தகை பெறுநர் அதன்மீது எவையேனும் கட்டிடங்களைக் கட்டியெழுப்பியுள்ள ஏதேனும் விடயத்தில், இவ்வுட்பிரிவுக்கிணங்க குத்தகை பெறுநருக்குப் பங்கிடப்பட்ட பங்கு, அத்தகைய கட்டிடங்களின் பெறுமதியைக் கவனத்திற்கொண்டு நியாயமானதாகவுள்ள அத்தகைய தொகையினால் ஆணைக்குழுத் தவிசாளரினால் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.".

(2) ஓராம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப் படும் திருத்தம் முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று நடை முறைக்கு வந்துவிட்டதென எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் உட்புகுத்தப் பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 31(3) ஆம் பிரிவில் குறிப் பிடு செய்யப்படுகின்றவாறானதும், அவ்வாறு உட்புகுத்தப்பட்டவாறான அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கவுள்ளதுமான அத்தகை ஏதேனும் கமத்தொழிற் காணி தொடர்பில் ஆக்கப்பட்ட ஏதேனும் நட்டஈடு பற்றிய தீர்ப்பு, செல்லுபடியாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் ஆக்கப்படுகின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஏ என்னும் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஏ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(அஅ) கமத்தொழில் சாரா நோக்கங்களுக்காக, அமைச்சரின் அங்கீகாரத்துடன் விற்பனை அல்லது குத்தகை மூலம் பாராதீனப்படுத்துதல்;"; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவினை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(1அ) அத்தகைய காணியின் உற்பத்திப் பெருக்கத்தை அதிகரிப்பதற்கு வேண்டிய அவசியத்தையும் அதில் தொழில் வாய்ப்பினைப் பெருக்குவதனையும் கருத்துட்கொண்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காக ஐம்பது ஏக்கர்களை விஞ்சுவதான தோட்டக் காணியை (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அல்லது (அஅ) என்னும் பந்தியின் கீழ் குத்தகைமூலம் எவரேனும் ஆளுக்குப் பாராதீனப்படுத்துதல் ஆணைக்குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

10. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 42ஒ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஒ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ii) (அ) தேயிலை, இறப்பர் அல்லது தெங்கு நடுகை செய்யப்பட்ட தோட்டக் காணியின் விடயத்தில், அத்தோட்டக் காணியானது ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தேதிக்குநேர் முந்திய மூன்று கணக்கீட்டாண்டுகளுக்கு அத்தகைய தோட்டக் காணியின் உற்பத்தி ஏக்கரிலிருந்து ஓர் ஏக்கருக்கான சராசரி ஆண்டு விளைச்சலின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை ; ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தோட்டக்காணியின் ஓர் ஏக்கருக்கான சராசரி ஆண்டு விளைச்சல் இதற்கான I ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொகையொன்றுக்குச் சமமாக இருக்கின்றவிடத்து, அத்தகைய தோட்டக்காணியின் உற்பத்தியிலிருக்கும் ஒவ்

வோர் ஏக்கர் தொடர்பிலும் செலுத்தப்படற்பாலதான பணத் தொகை, இதற்கான II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதி வில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணத்தொகைக்குச் சமமான தாக இருத்தல் வேண்டும் :—

| நிரை I<br>ஏக்கரொன்றுக்கான சராசரி<br>ஆண்டு விளைச்சல் | | நிரை II<br>ஏக்கரொன்றுக்கான நட்டஈட்டுத்<br>தொகை |
|---|---|---|
| | தேயிலை | ரூபா |
| 1,500 | இருத்தலுக்கு மேல் .. .. | .. 2,500 |
| 1,000 | இருத்தலுக்கு மேல், ஆனால் | |
| 1,500 | இருத்தலை விஞ்சாமல் .. .. | .. 2,000 |
| 750 | இருத்தலுக்கு மேல், ஆனால் | |
| 1,000 | இருத்தலை விஞ்சாமல் .. .. | .. 1,500 |
| 750 | இருத்தலும் அதற்குக் குறைவாகவும் .. | .. 1,000 |
| | இறப்பர் | |
| 1,000 | இருத்தலுக்கு மேல் .. .. | .. 2,500 |
| 750 | இருத்தலுக்கு மேல், ஆனால் | |
| 1,000 | இருத்தலை விஞ்சாமல் .. .. | .. 2,000 |
| 500 | இருத்தலுக்கு மேல் ஆனால் | |
| 750 | இருத்தலை விஞ்சாமல் .. .. | .. 1,500 |
| 500 | இருத்தலும் அதற்குக் குறைவாகவும் .. | .. 1,000 |
| | தெங்கு | |
| 3,000 | காய்களுக்கு மேல் .. .. | .. 2,500 |
| 2,000 | காய்களுக்கு மேல், ஆனால் | |
| 3,000 | காய்களை விஞ்சாமல் .. .. | .. 2,000 |
| 2,000 | காய்களும் அதற்குக் குறைவாகவும் .. | .. 1,500; |

அல்லது

(ஆ) கொக்கோ, கறுவா, மிளகு, நெல் அல்லது வேறேதே னும் கமத்தொழிற் பயிர் நடுகை செய்யப்பட்ட தோட்டக் காணியின் விடயத்தில், அத்தகைய தோட்டக்காணியின் உற் பத்தியில் இருக்கும் ஒவ்வோர் ஏக்கருக்கும் 2,000 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை ;

(இ) அத்தகைய தோட்டக் காணி ஆணைக்குழுவுக்கு உரித் தாக்கப்பட்ட தேதியன்று நடுகை செய்வதற்கென அல்லது மீள்நடுகை செய்வதற்கெனத் தயாரிக்கப்பட்டிருந்ததும் ஆனால் அத்தேதியன்று கமத்தொழிற் பயிர் எதுவும் நடுகை அல்லது மீள்நடுகை செய்யப்பட்டிராததுமான தோட்டக் காணியின் விடயத்தில், அத்தகைய தோட்டக் காணியின் ஒவ் வோர் ஏக்கருக்கும் 1,000 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப் பட்ட ஒரு பணத்தொகை ;

(ஈ) அத்தகைய தோட்டக் காணி ஆணைக்குழுவுக்கு உரித் தாக்கப்பட்ட தேதியன்று இதற்கான I ஆம் நிரையில் குறித் துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் கமத்தொழிற் பயிர் நடுகை செய்யப்பட்டிருந்ததும் ஆனால் அத்தேதியன்று உற்பத்தியில்

இல்லாதிருந்ததுமான தோட்டக் காணியின் விடயத்தில், அத்தகைய தோட்டக் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் இதற்கான II ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதங்களில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை :—

| நிரை I<br>கமத்தொழிற் பயிர் | நிரை II<br>ஏக்கரொன்றுக்கான வீதம்<br>ரூபா |
|---|---|
| நெல் | 1,000 |
| தேயிலை | 1,000 |
| இறப்பர் | 1,000 |
| தெங்கு | 1,500 |
| வேறு ஏதேனும் கமத்தொழிற் பயிர் | 2,000 |

(உ) பயிரிடப்படாத தோட்டக் காணியின் விடயத்தில், அத்தகைய தோட்டக் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் 75 ரூபா என்ற வீதத்தில் கணக்கிடப்பட்ட ஒரு பணத்தொகை;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் அப்பந்தியின் I ஆம் II ஆம் நிரைகளின் கீழ் தோன்றும் "நெல்" "ரூபா 2,000" என்ற சொல்லமைப்புக்களை விட்டுவிடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் "பந்தி (அ) வின் (i) ஆம் உட்பந்திக்கு இணங்க" என்பது தொடங்கி "ரூபாவை விஞ்சுதல் ஆகாது" என்பது வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்ட ஏதேனும் தோட்டக் காணி தொடர்பிலான நட்ட ஈட்டைப் பெறுவதற்கு விருப்பந் தெரிவிக்கின்ற ஆளொருவருக்கு, (அவ்வாறு கணிக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையுடன் இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய ஆள் பெற உரித்துடையவரான ஏதேனும் மேலதிக பணத்தொகையைச் சேர்த்ததன் பின்னரும், அவ்வாறு கணிக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையிலிருந்து இவ்வுட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் கழிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையைக் கழித்த பின்னரும்) அத்தகைய தோட்டக் காணியின் ஒவ்வோர் ஏக்கருக்கும் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சுகின்ற பணத்தொகையொன்று கொடுக்கப்படுதல் ஆகாது.".

(ஈ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் :—

"(5) இந்தத் தேசிய அரசப் பேரவைச் சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட தோட்டக் காணிகள் தொடர்பிலும் அத்தகைய தோட்டக் காணிகள் தொடர்பில் நட்டஈடு கொடுப்பனவு செய்தல் தொடர்பிலும் 29 முதல் 40 வரையிலான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்ட வாக்கத்தில் 59 அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 59 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகிறது ; அது அச்சட்டவாக்கத்தின் 59 அ என்னும் பிரிவாகப் பயனுறுதல் வேண்டும் :—

"காலவிதிப்புக் கட்டளைச் சட்டம் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட காணிகளுக்கு ஏற்புடையதாகாமை.

59அ. ஆளெவரும் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் கமத்தொழிற் காணியை அல்லது தோட்டக் காணியை உடைமையில் வைத்திருப்பதன் மூலம் அல்லது பயன்படுத்துவதன் மூலம் அத்தகைய ஏதேனும் காணிக்கு காலவிதிப்புப்படியான உரித்து எதனையும் பெற்றுக்கொள்ள மாட்டார் ; அன்றியும் ஒரு நூற்றுண்டின் மூன்றிலொரு பங்குக்கு மேற்பட்ட ஒரு காலப்பகுதிக்கு குழப்பப்படாததும் இடையீடற்றதும் பாதகமானதுமான உடைமையைக் கொண்டிருந்தாரென அத்தகைய ஆளினால் எண்பிக்கப்பட்டாலொழிய, காலவிதிப்புக் கட்டளைச்சட்டமோ அல்லது உடைமையின் அல்லது பயன்பாட்டின் பயனைக்கொண்டு உரிமைகளைக் கொள்ளுதல் தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டமோ அத்தகைய காணிக்கு ஏற்புடையதும் ஆகாது.".

## பாகம் II

### 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துதல்

1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

12. (1) (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவு, அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "அத்துடன் அத்தகைய காணி அத்தகைய கட்டளைத் தேதியில்" என்பது தொடங்கி அவ்வுட்பிரிவு முடியவுள்ள எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அத்துடன் அத்தகைய ஏதேனும் கட்டளைக்கு அல்லது வேறுபடுத்தப்பட்டவாறுன, திரிபுபடுத்தப்பட்டவாறுன அல்லது திருத்தப்பட்டவாறுன அத்தகைய ஏதேனும் கட்டளைக்கு இணங்கச் செய்யப்பட்ட ஏதேனும் கைமாற்றம், அத்தகைய கமத்தொழிற் காணியிலுள்ள உரிமையையும், உரித்தையும், அக்கறையையும் கைமாற்றம் பெறுபவருக்குக் கைமாற்றம் செய்யும் பயனுடையதாதல் வேண்டும்."

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவு முதன்மைச் சட்டவாக்கம் தொடங்கிய தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதென எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கஞ் செய்வதன் மூலமும் அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"(1) காணி கொள்ளற் சட்டத்தின்கீழ் 1971 ஆம் ஆண்டு மே 29 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆனால் 1972 ஆம் ஆண்டு ஓகத்து 26 ஆம் தேதிக்கு முன்னர் கொள்ளப்பட்டிராவிட்டால், 1972

ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய அரசுப்பேரவையின் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டிருக்கக்கூடியனவும், காணி கொள்ளற் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அவை தொடர்பாக தீர்ப்பு எதுவும் செய்யப்பட்டிராதனவுமான காணிகளாக இருக்கும் எவையேனும் காணிகள் அவ்வாறு கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய காணிகள் இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், காணிச்சீர்திருத்தச் சட்டத்தின்கீழ் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய காணிகளின் சொந்தக்காரர்கள் அச்சட்டத்தின 14 ஆம் பிரிவின்கீழ் அல்லது 19 ஆம் பிரிவின்கீழ் சட்டத்தாலான குத்தகைக்காரர்களின் உரிமைகளுக்கு உரித்துடையராதலும் வேண்டும்; அத்துடன் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பமொன்றையும், காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்குச் சட்டத்திலான வெளிப்படுத்துகையொன்றையும் அவர்கள் செய்யலாம்.".

## பாகம் III

### குறித்த சில கட்டளைகளைச் செல்லுபடியுடையனவாக்கல்

*1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்கும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு மிடையே தேசிய அரசுப் பேரவையின் காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட குறித்த சில கட்டளைகளைச் செல்லுபடியுடையனவாக்கல்.*

14. தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையைத் திருத்துகின்றதும், வேறுபடுத்துகின்றதும், அல்லது திரிபுபடுத்துகின்றதும், அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் 1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்குப் பின்னரும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு முன்னரும் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், இப்பிரிவில் "வேறுபடுத்தற் கட்டளை" எனக்குறிப்பீடு செய்யப்படுவதுமான கட்டளை ஒவ்வொன்றும்—

(அ) தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லை முடிவடைந்ததன் பின்னர் அமைச்சருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது அத்தகைய வேறுபடுத்தும் கட்டளை அவரால் ஆக்கப்பட்டது ; அல்லது

(ஆ) தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ், ஆணைக்குழுவின் அத்தகைய கட்டளைக்கெதிராக அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றை அவர் முன்னர் நிராகரித்துள்ளார்,

என்ற நிகழ்வு காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருந்ததாக அல்லது செல்லுபடியற்றதாக இருப்பதாக கருதப்படுதல் ஆகாது.

தேசிய அரசுப் பேரவையின் காணிச் சீர் திருத்தச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் காணிக் கைமாற்றத்துக்கான குறித்தவை அங்கீகாரங்களைச் செல்லுபடியுடையன வாக்கல்.

15. (1) தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் 1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்குப் பின்னரும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு முன்னரும் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டதும், ஏதேனும் கமத்தொழிற் காணியைக் கைமாற்றுவதற்காக அங்கீகாரமளிப்பதுமான கட்டளை ஒவ்வொன்றும், அத்துடன் அத்தகைய ஏதேனும் கட்டளைக்கிணங்க பயனுறுத்தப்பட்ட கைமாற்றம் ஒவ்வொன்றும்—

(அ) அவ்வாறு அங்கீகாரமளிக்கப்பட்ட தேதியன்று 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் வலுவில் இருந்தன என்றாற்போன்றும் ; அத்துடன்

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது அத்தகைய காணியைக் கைமாற்றுவதற்கான அங்கீகாரத்தினையளித்து காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழான கட்டளையை ஆணைக்குழு ஆக்கியுள்ளது என்றாற்போன்றும்,

விடயத்துக்கேற்றாற்போல, செல்லுபடியுடையதாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் ஆக்கப்படுவதாகவும் பயனுறுத்தப்பட்டுள்ளதாகவும் பயனுறுத்தப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(2) தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றைத் திருத்துகின்றதும், வேறுபடுத்துகின்றதும் அல்லது திரிபுபடுத்துகின்றதும் 1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்குப் பின்னரும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு முன்னரும் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், இவ்வுட்பிரிவினால் "வேறுபடுத்தற் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான கட்டளை ஒவ்வொன்றும் அத்துடன் அத்தகைய ஏதேனும் வேறுபடுத்தற்கட்டளைக்கிணங்க பயனுறுத்தப்பட்ட ஏதேனும் கமத்தொழிற் காணியின் கைமாற்றம் ஒவ்வொன்றும்—

(அ) அத்தகைய வேறுபடுத்தற் கட்டளை ஆக்கப்பட்ட தேதியன்று 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவு வலுவுடையதாக இருந்தது என்றாற்போன்றும் ;

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் அமைச்சருக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றன் மீது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய வேறுபடுத்தற் கட்டளை அவரால் ஆக்கப்பட்டது என்றாற் போன்றும்,

விடயத்திற்கேற்றாற்போல, செல்லுபடியுடையதாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் ஆக்கப்படுவதாகவும் பயனுறுத்தப்பட்டுள்ளதாகவும், பயனுறுத்தப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்கும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு மிடையே செய்யப்பட்ட குறித்த சில சட்டத்தாலான தீர்மானங் களைச் செல்லு படியுடையன வாக்குதல்.**

**16.** எவரேனும் ஆள் தொடர்பில் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட சட்டத்தாலான தீர்மானமொன்று 1977 செத்தெம்பர் 1 ஆம் தேதிக்குப் பின்னரும் 1981 யூன் 3 ஆம் தேதிக்கு முன்னரும் ஆணைக்குழுவினால் இல்லாதாக்கப்பட்டமை ஒவ்வொன்றும், அத்துடன் அவ்வாள் தொடர்பில் அதனால் செய்யப்பட்ட புதிய சட்டத்தாலான தீர்மானம் ஒவ்வொன்றும்—

(அ) அத்தகைய இல்லாதாக்கல் தேதியன்றும் புதிய தீர்மானத்தேதியன்றும் 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 19 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் வலுவுடையனவாக இருந்தனஎன்றுற் போன்றும்; அத்துடன்

(ஆ) 1981 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, காணிச்சீர்திருத்த (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் மேற்சொல்லப்பட்ட பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணைக்குழுவுக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின் மீது மேற்சொல்லப்பட்ட பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழு அத்தகைய இல்லாதாக்குகையையும் தீர்மானிப்பையும் செய்துள்ளது என்றுற் போன்றும்,

செல்லுபடியுடையதாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் ஆக்கப்படுவதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

**17.** இச்சட்டத்தின் இப்பாகத்தில்—

“ஆணைக்குழு” என்பது தேசிய அரசுப் பேரவையின் காணிச்சீர்திருத்தச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட காணிச்சீர்திருத்த ஆணைக்குழு என்று பொருளாகும்; அத்துடன்

“காணிச் சீர்திருத்தச் சட்டம்” என்பது 1975 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான தேசிய அரசுப் பேரவையின் 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச்சீர் திருத்தச் சட்டம் என்று பொருளாகும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 180 ; (வெளிநாடு) ரூபா 200 ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.